## திருவாரூர் நகராட்சி

**ஹேவிளம்பி ஆண்டு தை மாதம் – 11ம் நாள். 24.01.2018ம் தேதி புதன் கிழமை காலை 10.15 மணிக்கு திருவாரூர் நகர்மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறும் அப்பொழுது கீழ்க்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் முன்னிலை.திரு.எம்.காந்திராஜ், பி.காம்,எம்,பி.ஏ, தனி அலுவலர்**

<table>
<tr><th>நகர்மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிமை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள்கள் விபரம்</th><th>தீர்மான எண்</th></tr>
<tr><td>24.01.2018</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளை டெங்கு காய்ச்சல் நோய்தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, மகளிர் குழுக்கள் மற்றும் தொண்டு நிறுவனம் மூலம் பெண்பணியாளர்கள் நியமனம் செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி 5 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர் விலாசம்</th><th>ஒரு நபருக்கு ஒரு நாள் ஊதியம்</th></tr>
<tr><td>1</td><td>மனோலயம் ஹெல்த்கேர் டிரஸ்ட், பூதமங்கலம் போஸ்ட், திருவாரூர்</td><td>ரூ.210/–</td></tr>
<tr><td>2</td><td>அன்னை மகளிர் சுயஉதவிக்குழு, அழகிரி நகர், திருவாரூர்.</td><td>ரூ.260/–</td></tr>
<tr><td>3</td><td>ஜெயநேந்திரல் ரூரல் சொசைட்டி 7.ஜி, கட்டிடம் எதிர்புறம், திருத்துறைப்பூண்டி</td><td>ரூ.250/–</td></tr>
<tr><td>4</td><td>ஆர்.டி.பவுண்டேசன், டி.டி.பி. ரோடு, முத்துபேட்டை</td><td>ரூ.260/–</td></tr>
<tr><td>5</td><td>நிலா மகளிர் சுய உதவிக்குழு, மருதப்பாடி தெரு, திருவாரூர்.</td><td>ரூ.275/–</td></tr>
</table>
மேற்படி 5 ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:<br>
வரிசை எண்.1ல் கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள பூதமங்கலம் மனோலயம் ஹெல்த் கேர் டிரஸ்ட் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.</td><td>மன்ற தீர்மான எண்.772<br><br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td>24.01.2018</td><td>இந்நகராட்சி கணினி பிரிவு மற்றும் அலுவலக அனைத்து பிரிவுகளிலும் உள்ள கணினி இயந்திரங்களில் ஏற்படும் பழுதுகள் சீர்செய்வதற்கும், பராமரிப்பு பணிக்காக உபகரணங்கள் வாங்கி கொள்ளவும் ஆகும் செலவினம் ரூ.1.00லட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.595 நாள்.15.09.2016 நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி செலவினத் தொகை தற்சமயம் முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும் நடப்பு 2017–2018ம் ஆண்டிற்கு மேலும் 4 மாதங்களுக்கு செலவினம் மேற்கொள்ள வேண்டிய நிலையில் நிர்வாக நலன்கருதி ரூ.1.50 லட்சம் கூடுதல் செலவினத்திற்கு ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
மேற்படி கூடுதல் செலவினத்தினை நிர்வாக நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொதுநிதியில் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td>மன்ற தீர்மான எண்.773<br><br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td>24.01.2018</td><td>இந்நகராட்சி ஆணையர் அவர்களின் அலுவலக பணிக்கு பயன்படுத்தப்பட்டு வந்த ஈப்பு வாகனம் எண்.டி.எண்.50சி / 0541 வாகனம் 09.12.2002ம் ஆண்டு வாங்கப்பட்டு கடந்த 15 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வந்தது. மேற்படி வாகனம் இதுவரை 428042 கி.மீ. கடந்துள்ளது. இவ்வாகனம் பார்வை 1ல் கண்ட அரசாணையின்படி நிர்ணயித்த காலமும் மற்றும் துாரமும் கடந்து விட்டபடியால், இவ்வாகனத்தினை இயல்பு நிலையில் கழிவினம் செய்ய அனுப்பப்பட்ட பிரோரணையினை பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்.அ5/983/2017 நாள்.18.10.2017ல் பரிந்துரை செய்யப்பட்டு சென்னை, தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்பு துறை, இயக்குநர் அவர்களுக்கு மேற்படி ஈப்பு வாகனம் எண்.டி.எண்.50சி/ 0541 வாகனத்தினை இயல்பு நிலை கழிவு செய்ய அனுமதி கோரப்பட்டுள்ளது.<br>
எனவே ஈப்பு வாகனம் எண்.50சி/ 0541 வாகனம் கழிவு செய்ய அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர் அதனை பொது ஏலம் விடவும், அவ்வாகனத்திற்கு பதிலாக அலுவலக பயன்பாட்டிற்கு புதிதாக ஈப்பு வாகனம் மகேந்திரா அன்ட் மகேந்திரா நிறுவனத்தின் மூலம் BOLERO ZLX AC BS4 ஈப்பு வாகனம் வாங்கி கொள்ளவும், மேலும் வாகனத்திற்கு செலுத்த வேண்டிய காப்பீடு தொகை , பசுமை வரி, வாகன பதிவு செலவினம் மற்றும் இதர செலவினங்கள் சேர்த்து உத்தேச செலவினம் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் புதிய வாகனம் வாங்கி கொள்ள மன்றத்தின் அனுமதி கோரி மன்றப்பொருள் வைக்கப்பாபடுகிறது.</td><td>மன்ற தீர்மான எண்.774<br><br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>1. மேற்படி ஈப்பு வாகனம் எண்.டி.எண்.50சி/ 0541 வாகனம் இயல்பு நிலை கழிவு செய்ய அனுமதி பெறப்பட்ட பின்னர் பொது ஏலம் விட அனுமதி வழங்கலாம்.<br>2. புதிதாக ஈப்பு வாகனம் மகேந்திரா அன்ட் மகேந்திரா நிறுவனத்தின் மூலம் ஈப்பு வாகனம் வாங்கி கொள்ளவும் வாகனத்திற்கு செலுத்த வேண்டிய காப்பீடு தொகை , பசுமை வரி, சாலை வரி, வாகன பதிவு செலவினம் மற்றும் இதர செலவினங்கள் சேர்த்து உத்தேச செலவினம் ரூ.10.00 லட்சத்தினை பொது நிதியில் மேற்க்கொள்ளவும் புதிய ஈப்பு வாகனம் வாங்க நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் அனுமதி கோரி பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம். | |

**(ஒம்)எம்.காந்திராஜ்,**
**ஆணையர்/ தனி அலுவலர்,**
**திருவாரூர் நகராட்சி.**

இடம் திருவாரூர்
நாள்.24 .01.2018